**அசல்வழக்கு எண். OS. 260/2022- PW1 .**

**திருமதி.நஞ்சம்மா(எ) சிக்கநஞ்சம்மா க/பெ.**

**நாள்:02.07.2025.**

**குறுக்குவிசாரணை 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில்**

**சாட்சிக்கு தமிழ் தெரியாது என்றும் கன்னடம் மட்டுமே தெரியும் என்பதால் இந்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணிபுரியும் வழக்கறிஞர் திரு.சாந்தமூர்த்தி., B.Sc., L.L.B., M.S.No.506/2023 அவர்கள் சாட்சிக்கு கன்னடத்தில் சொல்ல சாட்சி திரும்ப கன்னடத்தில் சொல்லும் பதிலை அவர் தமிழ்ல் மொழியாக்கம் செய்து இந்நீதிமன்றத்தில் தெரிவிக்கிறார். இருதரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரணை நடைபெறுகிறது. இருதரப்பு வழக்கறிஞர்களும் திரு.சாந்தமூர்த்தி., B.Sc., L.L.B., M.S.No.506/2023 அவர்கள் மொழிப்பெயற்பதற்கு ஆட்சேபனை இல்லை என்பது தெரிவிக்கப்பட பிறகு குறுக்கு விசாரணை நடைபெறுகிறது.**

நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனக்கு திருமணம் ஆகி சுமார் 40 வருடங்கள் ஆகிவிட்டது. என்ன பரிகராம் கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சொத்து கேட்டு வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் உப்பராண்டபள்ளியில் உள்ளது. சர்வே எண் தெரியுமா என்றால் எனக்கு படிப்பு இல்லை என்பதால் சர்வே எண் தெரியாது. தாவா சொத்துக்களின் சர்வே எண் தெரியாது. 1982 ல் என்னுடைய தகப்பனார் முனியப்பா என்பவர் சிக்கசொக்கப்பா, திம்மராயப்பா, ராஜப்பா ஆகியோர்களுக்கு தாவா சொத்தை பொறுத்து உயில் எழுதிய விவரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்துக்கள் எங்களுடைய பாட்டி திம்மக்கா என்பவர் கிரயம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். எங்களுடைய பாட்டி திம்மக்கா இறந்த பிறகு தாவா சொத்துக்களை முனிய்பபாவிற்கு கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். முனியப்பா அவருடைய சொத்தை அவருடைய விருப்பப்படி உயில் எழுதியிருப்பது சரியா என்றால் சரிதான். முனியப்பா அவருடைய சொத்தை உயில் எழுதிவைத்திருப்பாதால் தாவா சொத்துக்களில் எங்களுக்கு பாகம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் அனைத்து பெண்குழந்தைகளுக்கும் சீர் செய்து திருமணம் செய்து வைத்துள்ளார் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் முனியப்பாவின் தனிப்பட்ட சொத்து என்றும் அதை அவர் உயில் எழுதிவைத்து இருப்பதாலும் தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியாததாலும் எங்களுக்கு தாவா சொத்துக்களில் பாகம் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 1982 ல் ஒசூர் நீதிமன்றத்தில் முனியப்பா அசல் வழக்கு எண்.62/1982 தாக்கல் செய்திருந்தார் என்றால் அது தெரியாது. தற்போது தாவா சொத்துக்களின் மதிப்பு எவ்வளவு என்றால் 1 ஏக்கர் சுமார் ரூ.40 இலட்சம் விலை போகும். தாவா சொத்துக்களின் மதிப்பு தற்போது அதிகமாகிவிட்டதால் துர்லாபம் அடைய பொய்யாக வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ஒருபோதும் கூட்டுக்குடும்பத்தில்

இல்லை என்றும் அதனால்  நான் கூட்டு சுவாதினத்தில் இருப்பதாக சொல்லி பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்ய எனக்கு அருகதை இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணம் தவறானது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**வழக்கறிஞர் திரு.சாந்தமூர்த்தி., B.Sc., L.L.B., M.S.No.506/2023 அவர்கள் மொழிபெயர்த்து சொன்னதில் இருதப்பு வழக்கறிஞர்களும் அட்சேபனை இல்லை என்று  நீதிமன்றத்தில் தெரிவித்தார்கள்.**

ஒம்./- எஸ்.விஜய் அழகிரி,. பி.காம்.,பி.எல்.,
சார்பு நீதிபதி,
தேன்கனிக்கோட்டை.